உ

சிவமயம்

ஆவரங்கால் கிழக்கை பிறப்பிடமாகக் கொண்ட

# அமரர் செல்வராஜா ரஜிவர்மன்

அவர்களின்



# 90ம் நாள் நினைவு மலர்

27—07—2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நினைவு மலர்



யாழ்ப்பாணம் ஆவரங்கால் கிழக்கு புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர் **செல்வராசா ரஜிவர்மன்** அவர்களின்

அமரத்துவம் குறித்த

நினைவு மலர்

27-07-2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்

ஒளிதர வந்து

காலனின் கணக்கில்

காலத்தைக் குறுக்கி அகாலமாய்

விரைந்திட்ட எங்கள்

இரத்தத்தின் இரத்தம்

வர்மனின்

இனிய நினைவுகளை எங்கள்

இதயங்களில் சுமந்த வண்ணம்

இம்மலரை

அவரின் தாள்களுக்கு

அர்ப்பணிக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சுபம்

இங்ஙனம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



| மனம் மகிழ | மனம் நெகி |
| --- | --- |
| 17 - 01 - 1982 | 29 - 04 - 2007 |

## அமரர்

# செல்வராஜா ரஜிவர்மன்

### திதி வெண்பா

பார் போற்றும் சர்வசித்து வருஷம் சித்திரை மாதமதில்

ஞாயிற்றுக் கிழமை எனும் நன்னாளில்

ரஜிவர்மன் புவி நீத்துச் சொர்கத்

தில்லிடை சேர்ந்த காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் கைதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணிநல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்வித்து
உன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந் துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாதஇன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போத அடியின் கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறுவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடி சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீஅருள(ல்) வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான் முகில்வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறை விலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

முற்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் கோலம்





செல்வராசா + கமலாதேவி

வாசுகி | ரஜிவர்மன் (அமரர்) | நவரந்தன் | நதிவர்மன்

## ரஜிவர்மனது வாழ்க்கை வரலாற்றில்.....

எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்
அப் போதந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
நல்லா ரெண்ணுன் நல்குரவறியான்
தீயா ரெண்ணுன் செல்வரென் றென்னுன்
தரியா னொருகணம் தருகணுளன்
உயிர் கொடு போவான் உடல் கொடுபோவான்
ஏதுக் கழுவீர் ஏழை மாந்தர்கள்.

– கபிலர் உள்ளத்து எண்ணத்துளிகள்

இந்துவின் முத்தென விளங்கும் ஈழமணித்திருநாட்டின் சிரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் வளமொடு திகழும் வலிகாமம் கிழக்கில், கலை வளமும் கவின் வளமும் நிறைந்திருக்கும் ஆவரங்கால் கிழக்கு, புத்தூரில் பிள்ளையார், முருகனின் அருளால் நலமுடன் விளங்கும் செல்வராசா கமலாதேவி தம்பதிகள் செய்த தவத்தின் பயனாக சந்தான விருத்திகளில் இரண்டாவது பிள்ளையாகவும் ஆண் மக்களில் முதல் மகனாகவும் வந்து 17.01.1982ல் பிறந்தவனே ரஜிவர்மன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நிறை வாசுகியை அக்காவாகவும் நவரந்தன், நதிவர்மன் ஆகியோரை அன்புத் தம்பிமாராகவும் கொண்ட ரஜிவர்மன் குடும்பம், அன்பு எனும் அழகிய கடலில் நீந்தும் அளவான குடும்பம், அமைதியான குடும்பம் என அயலவரால் பேசப்பட்ட குடும்பமாகும்.

ரஜிவர்மன் தனது ஆரம்பக்கல்லியை ஆவரங்கால் கிழக்கு லிங்கன் முன்பள்ளியில் தொடங்கி தனது பள்ளிக் கல்வியை 1988-1998 வரையில் யா/புத்தர்கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் தொடர்ந்து க.பொ.த(சா.த)ல் தேர்ச்சி கண்டு, தனது உயர் கல்வியை 2001 வர்த்தகப்பிரிவில் யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்றான். தனது பள்ளிப் பருவகாலத்திலும் அதன் பிறகும் கல்வியைத் தேடுவதோடு, கலை நிகழ்வுகளிலும், விளையாட்டு நிகழ்வுகளிலும் தனது திறமையைக் காட்டி வந்தான், புத்தூர் எவரெஸ்ற் விளையாட்டுக்கழகத்தின் ஓர் அங்கத்தவனாக தன்னைக் காட்டிக்கொண்ட ரஜிவர்மன் உதைபந்தாட்டத்திலும் தன் திறமையைக் காட்டத் தவறவில்லை, மேற்படிப்பைத் தொடரும் விருப்பத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்காக 2006ல் யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவனாக தடம் பதித்தான்.

தன் குடும்ப அங்கத்தவரோடு அன்பாகவும், அமைதியாகவும், ஆடம்பரமற்ற நிலையிலும் தனது வரலாற்றுப் பதிவிற்குரியதாக நடத்தைக் கோலங்களை காட்டி வாழ்ந்து வளர்ந்து கொண்டிருந்த ரஜிவர்மன் ஊடகத்துறையில் நாட்டங் கொண்டவனாக தன்னை ஆக்கிக் கொண்டான்.இதன் பயனாக நமது ஈழநாடு என்னும் தினசரி பத்திரிகையில தன் பணியை பயிற்சிப் பணியாகத் தொடங்கிய ரஜிவர்மன் தினக்குரல், உதயன் பத்திரிகைகளிலும் ஊடகவியல் பணியைத் தொடர்ந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகப் பணியாளர்களோடும் தனை அறிந்த உத்தியோக நிலையில் உள்ளவர்களோடும், தான் சேர்ந்த சமூகத்தினரோடும், நண்பர்களோடும் அன்புடனும் பணிவுடனும் பழகி வந்த தன்மைகளினாலும், வேண்டியவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவரவர் நெஞ்சங்களில் தனக்கென ஓர் இடம் பிடித்தமையினாலும் அத்தகைய மைந்தனை, சகோதரனை இழந்த குடும்பம் தன் ஒளிநிலை இழந்து தவியாய் தவிக்கின்றதே!

'நல்லோரும் வல்லோரும் நாற்பதிற்குள் போவார்
அல்லாதோரே அறுபதை அடுப்பார்'

என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க நன்மையும், வன்மையும் தன் குடும்பத்திற்குத் தேடிக் கொடுக்கும் இளம்வயதில், காலனில் கணக்கு மாற்றப்பட்ட நிலையில் 29-04-2007 அன்று தண்மதி வளரும் துவாதசி திதியில் வர்மன் சுகதேகியாக சுவர்க்கத்தை அடைந்து அமரனாகி புனிதனாகி பேரின்பம் என்னும் கடலில் சங்கமமாகிவிட்டான். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

குடும்பத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைபிரிந்த இதயங்களின் புலம்பல்கள்...

### அம்மா அப்பா புலம்பல்

ஆணாய் வந்தாய் ஆனந்தம் கொண்டோம் – உனை
அள்ளியே நின்றோம்
தேனாய்த் தருவாய் பதில் பல கண்டோம் – அதிலே
தெவிட்டாது நின்றோம்
வீணாய்ப் போவாய் என விதியேதும் அறியோம் – வந்த
வினை நாங்கள் எண்ணோம்
போனாய் வராமலே மூச்சின்றிப் போனோம் – நாங்கள்
முழுமையாக அழிந்தோம்.

### அக்கா புலம்பல்

மூத்த மகளாய் முதல் வந்தேன்
மூன்று சகோதரர் என் துணை நின்றீர்
பார்த்த கண்களின் பார்வை பட்டோ
பார்த்திருக்க நீ இடையில் சென்றாய்!
வார்த்தை ஜாலம் இல்லாதவனே என்னில்
வளமாம் பாசம் கொண்டவனே!
காக்க வைத்துச் சென்றனையோ நான்
காணாதுலகம் புகுந்தனையோ!

### தம்பிமார் புலம்பல்

முத்தமிழின் முதல் தமிழ் போல் – நம்
மூவர்க்குமே முழுமதிபோல்
மூத்தவனாய் வந்தவனே – எங்கள்
முழுப் பொறுப்பும் ஏற்றவனே!
பார்த்திருந்த எங்கள் மீது – முழுப்
பாரந்தனையும் சுமத்திவிட்டு
காத்திருந்து நாங்கள் கதறியழ – நீயோ
காணாதுலகம் சென்றனையோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பப்பா புலம்பல்

வம்சத்தை விளக்க வந்த வர்மனே
          என் பேரன் நீ என்றேன்
நம் சந்ததிக்கு மகன் தந்த
          சரித்திர புத்திரனே நீ என்றேன்
நம்பி நானும் நலமாயிருக்க
          நன்மை பல காட்டி வைத்தாய் – இப்போ
நம்பா நிலையில் நானிருக்க நீ
          எங்கு சென்றாய் அன்புப் பேரா

## உற்றார் உறவினர் புலம்பல்

உற்றவரை அரவணைத்து
          ஊருக்காக வாழ்ந்திருந்து
இற்றவரை நிஜத்தில் நின்று
          நினைத்திருக்க வைத்து இன்று
பற்றில் நிறை ரஜிவர்மனே
          பாரில் கடமை முடிக்கமுன்னர்
மற்றை உலகு பார்ப்பதற்காய்
          பரமனவன் இழுத்தானோ?
சொந்தங்கள் சேர்ந்திருந்து
          சொல்லால் உனை நினைக்கின்றோம்
வெந்த துயர் வடிவாகி
          வீட்டில் நாளும் கரைகின்றோம்
எங்களுக்குச் சொன்னவைகள்
          எங்களுக்கே ஆனவையாய்
வந்து போகும் வாழ்க்கையதில்
          வாழும் வரை உனை மறவோம்.

## நண்பர்கள் புலம்பல்

நண்பருக்கு நலம் காட்டி
          நாமிருக்கும் நிலை காட்டி
அன்பிருக்கும் உன் உள்ளத்தால்
          அனைவரையும் அணைத்துக் கட்டி
பண்பு நிலை மிகுந்தோனே பார்த்தோர்
          மெச்ச வளர்ந்தோனோ!
நண்பர் நாங்கள் தேடி நிற்க
          நாட்கணக்க னுனைச் கொண்டானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்
NORTH SRI LANKA JOURNALISTS' ASSOCIATION

## வர்மன் மறக்கப்பட முடியாதவன்

செல்வராசா ரஜிவர்மன் மிக இளம் வயதிலேயே எம்மிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்ட ஓர் ஊடகவியலாளன். ஊடகத்துறையினில் நுழைந்து மிக குறுகிய காலத்தினுள் சாதித்துப் பெயர் வாங்கியவன். அதிலும் குடாநாட்டிலிருந்து வெளிவந்த, தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கும் நமது ஈழநாடு, யாழ்.தினக்குரல், உதயன் உள்ளிட்ட மூன்று நாளிதழ்களில் இந்த இளம் வயதினுள் கடமையாற்றியவன் அவன் ஒருவன் மட்டுமே.

புன்முறுவலுடன் கூடிய அந்த மென்மையான சிரிப்பு, சுதிர்ந்து பேசத்தெரியாத அந்தச் சுபாவம், அனைவரையும் கனம் பண்ணும் பாங்கு, உற்ற நேரத்தில் எல்லாம் தோள் கொடுக்கும் அந்த நட்பு என்பவை அவனோடு பின்னிப்பிணைந்தவை.

அதேவேளை செய்திகளை சேகரிப்பதிலுள்ள ஆர்வம், புகைப்படக்கலையினில் அவன் காட்டிய ஆர்வம், தொழில்சார் நிறுவனம் மீதான அவனது விசுவாசமென அவனைப்பற்றி எழுதிக்கொண்டே போகலாம்.

ஏப்ரல் 29, வர்மன் எம்மிடமிருந்து பறிக்கப்படுவதற்கு இருதினங்கள் முன்னர் மறைந்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வினில் கலந்து கொண்ட அந்த ஒரு சில ஊடகவியலாளர்களுள் வர்மனும் ஒருவன். அங்கு கூறியது போன்றே ஊடகவியலாளர்களாகிய நாங்கள் எங்கள் மக்களுக்காக குரல் கொடுக்கும் உன்னத பணியினில், இழப்புகளை கண்டு அஞ்சாது தொடர்ந்தும் முன் நடப்போமென உறுதியெடுத்துக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நிற்பான் என்றும் வாழ்வான்

பத்திரிகைப் பணி மக்கள் பணி. அவர்களது நலன் கருதி உழைக்கும் பணி. மக்களுக்கு உள்ள உரிமைகளை, அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களை, எதிர்நோக்கும் குறைபாடுகளை வெளிப்படுத்தி அதிகாரத்தில் உள்ளவர்களை - அவர்கள் அரசியல் அதிகாரத்திலிருந்தாலும் சரி, நிர்வாக அதிகாரத்திலிருந்தாலும் சரி - தட்டிக் கேட்கும் பிரதான கடமை ஒவ்வொரு ஊடகவியலாளனுக்கும் உள்ள பொறுப்பு.

அந்தப் பணியைச் செய்யும் பத்திரிகையாளன் சம்பந்தப்பட்டவர்களின் வெறுப்பையும் மக்களின் மதிப்பையும் பெறுவது வழக்கம்.

ஆனால், இன்றோ மக்கள் நலனுக்காக உழைக்கும் பத்திரிகையாளனை அதிகாரத்தில் உள்ளோர் எதிரியாகவும் அந்நியனாகவும் பார்க்கும் காலமாக மாறியுள்ளது.

ஒரு ஜனநாயக ஆட்சியின் மூலாதாரமாக விளங்கவேண்டிய பத்திரிகை - ஊடக - சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் இன்று கேள்விக்குறியாகிவிட்டன. பத்திரிகையாளரின் பணி உயிர் ஆபத்தை எதிர்நோக்கும், சுதந்திரமாகச் செயற்பட முடியாத பணியாக மாறிவிட்டது. இது அவனுக்கு மட்டுமன்றி, மக்களுக்கும் நாட்டுக்கும் பெரும் பாதகமான விளைவைத் தோற்றுவித்துள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் இளம் பத்திரிகையாளன்செ.ரஜிவர்மன் எங்கள் நிறுவனத்தில் சில மாதங்களுக்கு முன்னரே பணிக்குச் சேர்ந்தான். அதனைத் தொடங்கிய இரண்டொரு வாரங்களிலேயே பத்திரிகைத் தொழிலை விரும்பிச் செய்யும் துடிப்புள்ள இளைஞன் என்று இனங்கண்டு கொள்ள முடிந்தது. அனுபவம் குறைவாக இருந்தபோதிலும் ஆர்வம் மிகுந்து காணப்பட்டது. செய்திகளையும் ஏனைய தகவல்களையும் முந்திக்கொண்டு பெற்றுவிடவேண்டும் என்ற - ஒரு துடிப்பான பத்திரிகையாளனுக்கு இருக்கவேண்டிய - தொழில் சார் குணாம்சம் அவனிடம் முகிழ்ந்திருந்தது

பத்திரிகைத் தொழிலை ஆர்வத்துடனும் துடிப்புடனும் ஆற்றிய ஓர் இளைஞனைத் துப்பாக்கி வேட்டுக்கள் இரையெடுத்துவிட்டன. அவனது இழப்பு, குடும்பத்தினருக்கு மட்டும் உண்டான நட்டம் அல்ல: பத்திரிகைத் துறைக்கும் - ஊடகவியல்துறைக்கும் - மொத்தத்தில் எங்கள் மண்ணுக்கும் ஏற்பட்ட பெரும் இழப்பாகும்: ஜனநாயகத்தின் மீது விழுந்த பேரிடியாகும்.

ரஜிவர்மன் குடாநாட்டுப் பத்திரிகையாளர் மனங்களில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் ஊடகத்துறை யினராலும் மறக்கமுடியாதவனாக நினைவில் நிற்பான்; என்றும் வாழ்வான்.

ம.வ.கானமயில்நாதன்
பிரதம ஆசிரியர்
உதயன் - சுஞ்சீவி

16.07.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைக்கு முதன்மை கொடுத்த கண்ணியமான இளவல்

யாழ்.தினக்குரல் நிறுவனத்தில் அமரர் செல்வராசா ரஜிவர்மன் அவர்கள் சொற்பகாலமே பணி செய்திருந்தாலும் தனது முத்திரையை இங்கு பொறித்துச் சென்றவர். பழகுவதற்கு இனிமையானவரான இவர் எல்லோருடைய அன்புக்கும் உரியவராகவிருந்தார். எந்த நேரமும் சிரித்த முகத்துடன் கலகலப்பாக விளங்கிவந்த ஒரு நல்ல பத்திரிகையாளன்.

கடமையிலே கண்ணாயிருந்து காலநேரம்பாராது என்றும் எமது நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிவந்த ரஜிவர்மன் பல கல்வியாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திச் சேவை செய்தவர். அவரது அகால மரணம் கேட்டதும் எமது ஊழியர்கள் மத்தியிலே பேரதிர்ச்சி ஏற்பட்டது. இப்பதிரிகையாளனுக்கு ஏற்பட்ட கதியைத் தமக்கு ஏற்பட்ட கதியாகவே ஒவ்வொருவரும் கருதினர்.

ரஜிவர்மனது இழப்பு அவரது குடும்பத்தவருக்கு மட்டுமல்ல எம்போன்ற ஊடகவியலாளர்களுக்கும் பேரிழப்பாகும் அவரது இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் தினக்குரல்
330,கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

ஆசி.நடராஜா
பொது முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப் பணியை அர்த்தமுடையதாக்கிய அடக்கமான மாணவன்

விஷ்ணுவின் பள்ளி வாழ்க்கையில் அர்த்தமுடைய சம்பவங்கள் பலநூறு நடந்தேறின. அதில் ஒன்று எனது அன்புக்கும் கண்ணியத்துக்கும் உரிய அமரர் செ.ரஜிவர்மன் அவர்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது....

அன்றொருநாள் அப்போதைய அதிபர் உயர் திரு.நா.சிவஞானம் அவர்களின் ஆலோசனைக்கிணங்க பாடசாலைக்கு வருகை தராத மாணவர்களின் இல்லங்களைத் தரிசிக்கவென அவருடன் சென்றிருந்தேன். வீதிதோறும் பல பெற்றோர்கள் எமை இன்முகத்துடன் வரவேற்றனர். சற்றுத்தூரம் சென்ற நாம் ஏக்கம் நிறைந்த ஒரு தாய் ஒருவரைக் கண்டோம். நாம் வருவதை எப்படியோ அறிந்துவிட்ட அத்தாயின் மகன் வீட்டிலிருந்து புறப்பட்டு தோட்டத்தின் அருகிலுள்ள பற்றைக்குள் மறைந்து விட்டான்.

"பள்ளிக்கூடம் வராமல் பல பிள்ளைகள் வீடுகளில் நிற்கினம் அதற்கு நீங்களும் உடந்தையாய் இருக்கிறியள்" – என்று அதிபர் கூறியதைக் கேட்ட அத்தாய் மகனைக் காட்டிக் கொடுக்கவும் மனமின்றி பொய் கூறவும் முடியாமல் தவித்ததை நாம் கண்டோம். நிலைமையை புரிந்து கொண்ட அதிபர் சுவாரஸ்யமாக "முயல் ஒன்று பற்றைக்குள் ஓடுகிறது நெருப்பு மூட்டுங்கள்" என்று கூறினார் அப்போதுதான் அத்தாயார் விடயத்தை எம்மிடம் கூறினார்.....

அன்று பற்றைக்குள் மறைந்த மாணவன்தான் பின்பு ஊக்கமாகக் கற்று 1998ல் பாடசாலைக்குப் புகழ் தேடித்தந்த பரீட்சை முடிவையும் பெற்றுத்தந்து தொடர்ந்து ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியிலும் எமது பாடசாலையின் புகழை நிலைநாட்டி இன்று பத்திரிகை உலகத்திற்கே ஒளிவிளக்காக பிரகாசித்து மறைந்த அமரர் செ.ரஜிவர்மன் அவர்கள்...

அடக்கமும் பணிவும் கொண்ட நல் மாணவனாகத் திகழ்ந்த இவர் பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னரும் பாடசாலை பற்றி அக்கறையுடன் விசாரித்துக் கொள்வார். அடிக்கடி பாடசாலைக்கு வந்து செல்லும் இவர் பாடசாலையின் விருத்தி குறித்து ஆழமாகக் கலந்து பேசுவார். தான் வாழும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் எவ்வளவோ செய்ய வேண்டுமென ஆவல் நிறையப் பெற்ற இவர் விதியின் பலனாக இடையே மடிந்தாலும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு.கு.ரவிச்சந்திரன் B.A. Dip in Edu
அதிபர்
யா/புத்தர்கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்,
புத்தூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் சில பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 17.01.1982

இறப்பு 28.01.2007



கண்ணீர் அஞ்சலி

செல்வன் செல்வராசா ரஜீவ்மன்

கண்ணீர் அஞ்சலி

அமரர் செல்வராசா ரஜீவ்மன்

# கண்ணீர் அஞ்சலி



17 ★ 01 ★ 1988

19 ★ 04 ★ 2007

# கண்ணீர் காணிக்கைகள்




தோற்றம் 17 . 01 . 1988

மறைவு 19 . 04 . 2007

20.04.2007







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் பத்திரிகையாளரின் படுகொலை பெரும் துயரம் மிகுந்த இழப்பாகும்

## யுத்தம் நிறுத்தப்படும் வரை ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடரவே செய்யும்

-இலங்கைத் தமிழ் ஊடக அமையம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடகவியலாளர் வர்மனின் கொலைக்கு தமிழ்க் கூட்டமைப்பு கடும் கண்டனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டு பிடிப்புக்கள்

| கண்டுபிடித்தவை | கண்டுபிடித்தவர் | ஆண்டு | நாடு |
|---|---|---|---|
| 1.ஆகாய விமானம் | ஆர்வில்.வில்பர்ட் சகோதரர்கள் | 1903 | அமெரிக்கா |
| 2.கார்(நீராவி) | நிக்கோலஸ் குனாட் | 1769 | அமெரிக்கா |
| 3.கார்(பெற்றோல்) | கார்பென்ஸ் | 1769 | பிரான்ஸ் |
| 4.ஒலிபெருக்கி | ஹார்ட் ஷாரஸ் | 1900 | பிரிட்டன் |
| 5.சலவை இயந்திரம் | ஹார்லி மெஷின் கம்பனி | 1907 | அமெரிக்கா |
| 6.குளிர்சாதனப்பெட்டி | ஜேம்ஸ் ஹாரிஸன் | 1850 | அமெரிக்கா |
| 7.தொலைக்காட்சி | ஜோன்லாக்கி பெயர்ட் | 1926 | அமெரிக்கா |
| 8.தொலைபேசி | அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் | 1876 | அமெரிக்கா |
| 9.கழகாரம் | பார்த்தோமியுமான்மீப்பி | 1462 | இத்தாலி |
| 10.நீராவி இயந்திரம் | ஜேம்ஸ் வார்ட் | 1765 | பிரிட்டன் |
| 11.வானொலி | ஜி.மார்க்கோனி | 1901 | இத்தாலி |
| 12.ஹெலிகொப்டர் | எதியன்ஒஹ்மிச்சன் | 1924 | பிரான்ஸ் |
| 13.லிப்ஃட் இயந்திரம் | எலிசா ஜி.ஒட்டிஸ் | 1852 | அமெரிக்கா |
| 14.தட்டச்சுப்பொறி | மெல்லிகிரிண்டாரி | 1803 | இத்தாலி |
| 15.கல்வனோ மீற்றர் | ஆன்ட்ரிமேரி ஆம்பியர் | 1834 | பிரான்ஸ் |
| 16.செல்போன் | Dr.ஜே.பிரான்டன் பேர்க்கர் | 1908 | சுவிற்சர்லாந்து |

# உலகில் குறைந்தவை or சிறியவை

1) மிகச்சிறிய தேசிய கீதம் - ஜப்பானின் 4 வரிகளை உடைய கீதம்

2) மிகச் சிறிய உயிரினம் - ரீங்காரப் பறவை

3) குறைந்த சனத்தொகை கொண்ட நாடு - வத்திக்கான்

4) குறைந்த நாடுகள் கொண்ட கண்டம் - அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

கடந்த 29.04.2007 அன்று எமது ஒளி விளக்கு அணைந்தது என்ற செய்தினைச் செவிமடுத்து ஓடோடி வந்து எங்கள் ஆறாத் துயர்தனில் பங்கேற்றவர்களுக்கும், மலர் வளையங்களும், மலர் மாலைகளும் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், நேரிலும், தொலைபேசி,தபால் தந்தி மூலம் உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும், அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும், பத்திரிகைகளிலும், பிரசுரங்கள் மூலமும், கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், எங்கள் ஏந்தலின் இறுதிச் சடங்கின்போது சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும், இரங்கலோடு நினைவுரை ஆற்றிய அன்பு சால் பெருந்தகைகளுக்கும், நிறுவனங்களுக்கும், ஈமக்கிரியைகளிலும், இறுதி ஊர்வலத்திலும் பங்கு கொண்டவர்களுக்கும் மற்றும் அந்தியேட்டி சபிண்டீகரண கிரிகைகளிலும் கலந்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மலரை ஆக்குவதற்கு உதவியவர்களுக்கும், இம் மலரினை அழகுற அமைக்க உதவியவர்களுக்கும் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.





இங்ஙனம்
குடும்பத்தினர்.

மலராக்கம்:- திரு.ம.இரங்கநாதன் ஆசிரியர் (B.A, Dip.In.Education, Sp.Trd.Agri)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org